sns academy

an International CBSE Finger Print School
Coimbatore

## 2.4 கிழவனும் கடலும்

**I.கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.**

கதைக்கரு

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை மையக்கருத்தாய்க் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

சாண்டியாகோவின் தொழில்

இக்கதைக்கு நாயகர் சாண்டியாகோ. வயது முதிர்ந்த மீனவர்; முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் பிடிக்காமல் திரும்ப மாட்டார். ஆனால் கடந்த எண்பத்து நான்கு நாட்களாக அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை.

சிறுவன் மனோலின்

சிறுவனான மனோலின் அவருக்கு உதவியாளனாய்க் கடலுக்கு அவருடன் சென்றான். அவருக்குப் பேச்சுத் துணையாகவும் அமைந்தான். மீன் ஏதும் கிடைக்காததால் அவன் பெற்றோர் அவனை வேறொரு படகிற்கு அனுப்பி விட்டனர்.

சாண்டியாகோவின் விடாமுயற்சி

தமக்கு மீன்கள் கிடைக்காது என்று அனைவரும் இழிவாய்க் கூறியபோதும் கிழவர் மன உறுதியுடன் இருந்தார். அடுத்த நாள் காலையும் ஒரு மீனும் சிக்கவில்லை. எண்பத்து ஐந்தாவது நாள் நண்பகல் நேரம் அவர் போட்ட தூண்டில் மெதுவாய் அசைந்தது. மீன்களைக் கவர தூண்டில் முள்ளில் சூரை மீனைச் செருகி வைத்திருந்தார். தன்னையும் சேர்த்து இழுக்கும் மீனைப் பார்த்து அவர் ஆவேசமாக பேசினார். பெரும் போராட்டங்களுக்குப் பிறகு அவர் வைத்திருந்த ஈட்டியால் மீனை கொல்கிறார். பெரிய மீன் என்பதால் அதனை படகோடு சேர்த்து கட்டுகிறார். பிடித்த அந்த மீனை உண்ண வந்த சுறா மீன்களையும் விரட்டுகிறார். பிறகு கரையை அடைகிறார். சுறாக்கள் தின்றது போக மீனின் தலை, எலும்பு மட்டுமே மிஞ்சி இருந்தது .

## முடிவுரை

சாண்டிகோவை பார்க்க வந்த மனோலின் உன் திறமையும் விடாமுயற்சியும் வென்றுவிட்டது தாத்தா. இனி உன்னை யாரும் பழித்துப் பேச முடியாது. உன்னிடம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. இனி நான் உன்னோடு தான் மீன்பிடிக்க வருவேன் என்று கூறினான். இக்கதை மூலம் நாம் உணர்வது 'விடாமுயற்சி வெற்றியைத் தரும்' என்பதாகும்.